பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

30 08 2026 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத் துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், இரண்டு நாள் பயணமாக இன்று கேரளம் செல்கிறார்.

2. அரசுமுறைப் பயணமாக உஸ்பெகிஸ்தான் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபர் திரு. Shavkat Mirziyoyev உடன் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

3. உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெறும் தொழில்துறை மாநாட்டில், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று உரையாற்றுகிறார்.

4. ஹோர்முஸ் நீரிணைப் பகுதி தொடர்ந்து தங்களது கட்டுப்பாட்டில் உள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.

5. Lagos சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Talasila பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத் துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், இரண்டு நாள் பயணமாக இன்று கேரளம் செல்கிறார்.

ஆலப்புழாவில் தனியார் செய்தி நிறுவனத்தின் 115-ஆவது ஆண்டு விழாவில் அவர் உரையாற்ற உள்ளார்.

பின்னர் பத்தனம்திட்டா மாவட்டத்தில் உலக பிரசித்தி பெற்ற Aranmula படகு போட்டியை அவர் தொடங்கிவைக்கிறார்.

பின்னர், தலைநகர் திருவனந்தபுரத்தில் நடைபெறும் அரசு சார்பிலான ஓணம் சுற்றுலா வார விழாவை அவர் தொடங்கிவைக்கிறார்.

நாளை மறுநாள் லட்சத்தீவு செல்லும் அவர், அங்கு அகத்தியில் நடைபெறும் மீன்வளத்துறை நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

அரசுமுறைப் பயணமாக உஸ்பெகிஸ்தான் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபர் திரு. Shavkat Mirziyoyev உடன் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, டிஜிட்டல் இணைப்பு, எரிசக்தி, கல்வி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த அம்சங்கள் இடம்பெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சுரங்கம், அரியவகை கனிமங்கள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

மருத்துவம், விவசாயம், திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத்தை இரு மடங்காக அதிகரிக்க ஏதுவாக முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக அந்நாட்டில் உள்ள யோகா கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்கிறார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெறும் தொழில்துறை மாநாட்டில், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று உரையாற்றுகிறார்.

திறன்மேம்பாடு, தொழில்முனைவு, தொழிற்கல்வி தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

லக்னோ கண்டோன்மென்ட் பகுதியில் 120 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

மூன்று நாள் பயணமாக உத்தரப்பிரதேசம் சென்றுள்ள திரு. ராஜ்நாத் சிங், தமது பயணத்தின் நிறைவு நாளான இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியா - வியட்நாம் இடையேயான ஒத்துழைப்பு வலுவடைவதற்கு வெளிநாடுவாழ் இந்தியர்களின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியது என்று வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக வியட்நாம் சென்றுள்ள அவர், அந்நாட்டுத் தலைநகர் லாவோசில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையே சுற்றுலா மற்றும் ஜவுளித் துறைகளின் மேம்பாடு குறித்து அந்நாட்டு தொழில்துறையினருடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அந்நாட்டில் உள்ள கலாச்சார உறவுகளுக்கான இந்திய கவுன்சில், இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு திட்டக் குழுவுடன் அமைச்சர் கலந்துரையாடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் பஸ்தி மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

பஸ்தி - தண்டா சாலையில் சென்றுகொண்டிருந்த கார் மீது இருசக்கர வாகனம் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாவட்ட காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், மற்றொரு நபர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த தாகவும் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

**<<<<>>>>**

நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 669ஆக அதிகரித்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நடவடிக்கைகளில் உதவுவதற்காக இந்தியா பல்வேறு நிபுணர் குழுக்களை அனுப்பி வைத்துள்ளது.

இந்த பேரிடரில் உயிரிழந்தவர்களின் உடல்களை அடையாளம் காண ஏதுவாக, சடலங்களில் இருந்து DNA மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே நீர்மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள சுரங்கத்தில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக சிறப்பு தொழில்நுட்பக் குழு காத்மாண்டு சென்றடைந்துள்ளது.

மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக 24 மணி நேரமும் இயங்கக்கூடிய கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு உதவிடும் வகையில் காத்மாண்டு மற்றும் பீஜிங்கில் உள்ள இந்திய தூதரகங்களில் 24 மணி நேரமும் செயல்படும் தொலைபேசிய எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள நேபாள நாட்டிற்கு உதவிடும் வகையில் 57 டன் எடைகொண்ட நிவாரணப் பொருட்களை இந்தியா வழங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே 11 டன் நிவாரணப் பொருட்களுடன் விமானப் படை விமானம் காத்மாண்டு சென்றுள்ளதாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக 13 ராணுவ வீரர்கள் அடங்கிய மீட்புக் குழுவும் இந்த விமானத்துடன் சென்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**<<<<>>>>**

ஹோர்முஸ் நீரிணைப் பகுதி தொடர்ந்து ஈரான் கட்டுப்பாட்டில் உள்ளதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக் அந்நாட்டு ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த நீரிணைப் பகுதி மூடப்பட்டுள்ளதாகவும், இந்த வழியாக செல்லும் அனைத்து கப்பல்களும் முன் அனுமதி பெற வேண்டியது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஹோர்முஸ் நீரிணைப் பகுதி, கப்பல் போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டுள்ளது என்று அமெரிக்கா வெளியிட்ட அறிவிப்பை அடுத்து ஈரான் தெளிவுபடுத்தியுள்ளது.

<<<<>>>>

யுக்ரைன் தலைநகர் Kyiv அருகே உள்ள Bucha மாவட்டத்தில் ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதலில் 37 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் 50க்கும் மேற்பட் குடியிருப்புக் கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாக அம்மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

உணவகங்கள் மற்றும் வீடுகளில் பெரிய அளவில் தீப்பற்றி எரிவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே அந்நாட்டு அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வசிக்கும் வீடுகள் சேதடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அம்மாவட்டத்தில் Myla கிராமத்தில் உள்ள கிடங்கு ஒன்றும் இந்தத் தாக்குதலில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக திரு. ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

Lagos சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Talasila பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-9, 22-20 என்ற செட் கணக்கில் சக நாட்டு வீரரான Lalthazuala - வை வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றினார்.

மகளிர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் Rutaparna PANDA - Swetaparna PANDA இணை பட்டம் வென்றது.

இறுதிப்போட்டியில் இந்த இணை 21-14, 25-23 என்ற செட் கணக்கில் இந்தியாவின் Kavipriya SELVAM - Simran SINGHI இணையை வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில், இந்தியாவின் Dhruv RAWAT - MANEESHA இணை பட்டம் வென்றது.

இறுதிப்போட்டியில் இந்த இணை 21-18, 17-21, 16-11 என்ற செட் கணக்கில் இந்தியாவின் Sathwik Reddy KANAPURAM - Radhika SHARMA இணையை வென்றது.

------------

தாய்பே சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நிதிஷ்குமார் சின்ஹா, மணீஷ் சுரேஷ்குமார் இணை பட்டம் வென்றது.

------------

Pontianak சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இன்று இந்தியாவின் Tanvi Patri, கொரியாவின் KIM Min Sun-ஐ எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், இந்தியாவின் Ginpaul Sonna இந்தோனேசியாவின் Richie Duta RICHARDO-ஐ எதிர்கொள்கிறார்.

------------

ஆசியக் கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இன்று இந்தியா - தாய்லாந்து அணியை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இன்றிரவு 8 மணிக்குத் தொடங்குகிறது.